தினமணி

## மரக்கன்றுகள் வழங்கும் விழா

First Published : 26 Sep 2010 09:34:54 AM IST

சிதம்பரம், செப். 25: சிதம்பரம் ராமகிருஷ்ணா வித்யாசாலா மேல்நிலைப் பள்ளி சார்பில் சிதம்பரத்தை அடுத்த துணிசிரமேடு ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் மரக்கன்றுகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

÷பள்ளிச் செயலர் ஆர்.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ஆர்.ரவிசங்கர் வரவேற்றார். துளசேந்திரபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் ஜி.தியாகராஜன் சிறப்புரையாற்றினார்.

÷கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அரிமா சங்கத் தலைவர் பெரி.முருகப்பன் பரிசு வழங்கினார். ஆசிரியர் டி.கபீர்தாஸ் வாழ்த்துரையாற்றினார். விழாவில் பள்ளி மாணவ, மாணவிகள் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. ஆசிரியர் எம்.கே.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

## பருத்தி விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 26 Sep 2010 12:43:30 PM IST

பெரம்பலூர், செப். 25: பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். மாரிமுத்து தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியட்ட செய்திக் குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் இந்திய பருத்தி கழகம் மற்றும் இந்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் நிதியுதவியுடன் ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் என்ற திட்டம் பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகளவு பருத்தி சாகுபடி செய்யப்படும் கிராமம் தேர்வு செய்யபட்டு, அந்தக் கிராமத்துக்கு திட்ட மேற்பார்வையாளர் மற்றும் திட்ட களப்பணியாளரை அமைத்து, 400 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி விவசாயிகளுக்கு, நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதில் நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், பருத்தி பஞ்சுகளின் தரம் அறிதல் உள்ளிட்ட யுக்திகளை பயிற்சி, செயல் விளக்கம், கலந்துரையாடல் கூட்டங்கள், நேரடி வயல்வெளி ஆய்வுகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்துக்காக, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் அதிகளவு பருத்தி பயிரிடப்படும் நெற்குணம் கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் உள்ள பருத்தி விவசாயிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறலாம்.

**விவசாயிகளுக்கு இடுபொருள்கள் அளிப்பு**

First Published : 26 Sep 2010 12:47:44 PM IST

பாபநாசம்,செப். 25: தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வேளாண்மை அலுவலகம் சார்பில், செம்மை நெல் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருள்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பொ. லோகநாதன் தலைமை வகித்து விவசாயிகளுக்கு யூரியா, டி.ஏ.பி. இலை வண்ண அட்டை, எண் 1 மார்க்கர்,கோனோ வீடர் கருவி உள்ளிட்டவைகளை வழங்கிப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி இயக்குநர் ராஜ்குமார் (மாநில திட்டம்) , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கலியபெருமாள் (விவசாயம்) , வேளாண்மை உதவி இயக்குநர் கே. விஜயகுமார், வேளாண்மை அலுவலர் ஆனந்தபிரியா, துணை வேளாண்மை அலுவலர் மு.பழனிச்சாமி, உதவி விதை அலுவலர் எபிநேசர், கிடங்கு மேலாளர் சின்னதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் விவரங்களுக்கு, திட்ட பொறுப்பாளர் சி. சங்கரை 9443807381, 04328 292365, திட்ட மேற்பார்வையாளர் ஆர். செந்தில்குமாரை 9943449293, களப்பணியாளர் ஆர். செல்வராஜை 9865788728 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள்**

First Published : 26 Sep 2010 01:40:17 PM IST

செய்யாறு,செப்.25: செய்யாறு பகுதி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன என வேளாண்மை துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து செய்யாறு கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்ட அறிக்கை:

செய்யாறு வட்டாரத்தில் உளுந்து, காராமணி, பச்சைப் பயிறு மற்றும் துவரை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு, தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு செயல் மருந்துகளான அசாடிராக்டின் 2.5 லிட்டர், இனக்கவர்ச்சி பொறிகள், விதை நேர்த்தி மருந்து ஆகியன 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரை சீட்டுடன் வந்து, செய்யாறு கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தட்டைப் பயறு விதைப் பண்ணை**

First Published : 26 Sep 2010 12:12:31 PM IST

திண்டுக்கல், செப். 25: திண்டுக்கல் அருகே வடமதுரை வட்டாரத்தில் பயறு வகை சாகுபடியை அதிகரிக்கும் நோக்கத்தில், தரமான சான்று பெற்ற பயறு வகை விதைகளை அதிகளவு உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கான விதைப் பண்ணை எஸ்.குரும்பபட்டி கிராமத்தில் சுப்பையா என்ற விவசாயியின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கோ.சி.பி.7 என்ற தட்டைப் பயறு ரகம் உற்பத்தி செய்யப்படுகிறது.

விதைப் பண்ணையை மாநில திட்ட பொறுப்பு அதிகாரியும், திண்டுக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குநருமான மு.தெய்வேந்திரன், வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன், உதவி விதை அலுவலர் வெங்கடாச்சலம் ஆகியோர் வெள்ளிக்கிழமை களப்பணி ஆய்வு மேற்கொண்டனர். தரமான விதைகளை உற்பத்தி செய்ய தகுந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினர்.

**கால்நடைகளுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகம்**

First Published : 27 Sep 2010 09:31:07 AM IST

கடலூர், செப். 26: கடலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதாக, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்தார்.

÷ஆட்சியர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷கால்நடை பராமரிப்புத் துறை மூலம், மத்திய அரசின் காப்பீட்டுப் பிரீமியத்தில் 50 சதவீத மானியத்துடன், கடலூர் மாவட்டத்தில் பசுக்கள் மற்றும் எருமை மாடுகளுக்கு காப்பீட்டுத் திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. எனவே கால்நடைகளை வளர்போர், தங்களிடம் உள்ள கிடேரிகள், கறவை மாடுகள், கருவுற்ற மாடுகள், பால் வற்றிய மாடுகள் அனைத்தையும் காப்பீடு செய்து கொள்ளலாம்.

÷கடலூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் மாடுகளுக்கு காப்பீடு செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மத்திய அரசின் 4 பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் காப்பீடு செய்யப்படும்.

÷இறக்கும் மாடுகள், நிரந்தரமாகக் கருத்தரிக்க வாய்ப்பு இல்லாத மாடுகள், விபத்தில் சிக்கும் மாடுகள் ஆகியவற்றுக்கு இத்திட்டத்தில் இழப்பீடு கிடைக்கும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் ஆகியவற்றில் உள்ள, கால்நடை மருத்துவர்களைத் தொடர்பு கொண்டு, மாடுகளுக்குக் காப்பீடு செய்து கொள்ளலாம் என்றும் செய்திக் குறிப்பு
தெரிவிக்கிறது.

தினமலர்

**சம்பா பயிர்களை பூச்சிகள் தாக்கும் – பருவநிலை மாற்றத்தால் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,00:12 IST

பேரம்பாக்கம் : பருவ நிலை மாற்றத்தால் சம்பா நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.

ஐப்பசியில் அடைமழை, மார்கழியில் கடும் பனி என பெரியவர்கள் கூறுவர். ஆனால், தற்போது இதற்கு மாறாக புரட்டாசியிலேயே பனி பெய்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கனவே நடந்த மணல் திருட்டு, ஏரிகள் தூர் வாராதது, ஏரிகள் ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் போதிய மழைநீரை சேமிக்க முடியவில்லை.இதனால், ஆறு மற்றும் ஏரிப் படுகைகளில் நிலத்தடி நீர் முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த சொர்ணவாரி பட்டத்திலேயே விவசாயிகள் பலர் தங்களது விளைநிலங்களில் இருந்த நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் அவதிப்பட்டனர்.இந்நிலையில், விவசாயிகள் கொஞ்சம் இருந்த நிலத்தடி நீரை நம்பியும், ஐப்பசியில் அடை மழை பெய்யும் என சம்பா பயிரிட்டனர். மேலும், பருவமழை பெய்யுமா, பெய்யாதா என விவசாயிகள், வானத்தை பார்த்ததுதான் மிச்சம்.ஏற்கனவே, கிராமப்புறங்களில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு ஆட்கள் சென்று விடுவதால், விவசாயக் கூலி வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை, அடிக்கடி ஏற்படும் மின்தடை, நிலத்தடி நீர்மட்டம் குறைவு, பருவ மழை ஏமாற்றம் என விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.இக்கவலைகள் ஒருபுறம் இருக்க, தற்போது புரட்டாசி மாதத்தில்

பனிமூட்டம் அதிகம் இருப்பதால் நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் உள்ளது என, மற்றொரு கவலையும் விவசாயிகளைத் தொற்றிக் கொண்டுள்ளது.இவ்வாறு சொர்ணவாரி, சம்பா, குறுவை என ஒவ்வொரு சாகுபடியிலும் நிலத்தில் போட்ட பணத்தை எடுக்க முடியாத நிலையில் விவசாயிகள் பலர் கடனாளிகளாக உள்ளனர். பல விவசாயிகள் தங்களது விளைநிலத்தை பிளாட்டுகளாக மாற்றி விற்று வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது

**மீன் வளர்ச்சி கழகத்தில் முறைகேடு முற்றுகை, ஆர்ப்பாட்டத்தால் பரபரப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:40 IST

திருவண்ணாமலை: சாத்தனூர் அணை மீன் வளர்ச்சி கழகத்தில் நடந்த முறைகேடுகளை கண்டித்து மீனவர்கள் திடீர் முற்றுகை போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.சாத்தனூர் அணையில் கட்லா, ரோகு, விறால், கெளுத்தி, உள்ளிட்ட மீன் வகைகளை பிடித்து விற்பனை செய்ய பொதுப்பணித்துறையிடமிருந்து தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகம் டெண்டர் எடுத்து விற்பனை செய்து வருகிறது. நாள் ஒன்றுக்கு ஒரு டன் மீன் முதல் இரண்டு டன் மீன் வரை அணையில் இருந்து பிடித்து விற்பனை செய்யப்படுகிறது.மீன்களை கடந்த 40 ஆண்டாக சாத்தனூர் அணையை சுற்றியுள்ள மல்லிகாபுரம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 500 குடும்பங்களை சேர்ந்த 2,000 மீனவர்கள் மீன் பிடித்து வந்தனர். இவர்களுக்கு கூலியாக பிடித்து வரும் மீனில் மூன்றில் ஒரு பங்கு வழங்கப்படும்.

மீனவர்களுக்கு வழங்கப்படும் மீனை மீன் வளர்ச்சி கழகத்துக்கு அளிக்க வேண்டும் என அதிகாரிகள் கூறி மீனவர்களிடம் கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் நிர்ணயம் செய்து அவர்களே அந்த மீன்களை பெற்று கொள்கின்றனர்.
மீன் வளர்ச்சி கழக அதிகாரிகள் அந்த மீனை வெளி நபர்களுக்கு ஒரு கிலோ 80 ரூபாய்க்கு விற்பனை செய்து மீனவர்களை மோசடி செய்கின்றனர். மீன்களின் எடைகளை குறைவாகவும் கணக்கிடுகின்றனர். மீன் பிடித்து விற்பனை செய்யும் தொழிலை தனியார் நிறுவனத்திற்கு டெண்டர் விட மீன் வளர்ச்சி கழகம் முடிவு செய்துள்ளது
இதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்து மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சாத்தனூர் அணை மீனவர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். இதற்கு நடவடிக்கை இல்லை.

சாத்தனூர் அணை மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தை சேர்ந்தவர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகினர், அதற்கு நீதிமன்றம் மீன் பிடி தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்

என கூறி உத்தரவிட்டுள்ளனர்.மீன் வளர்ச்சி கழக அதிகாரிகள் அதை பொருட்படுத்தாமல் தனி நபர்களுக்கு டெண்டர் விட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆத்திரமடைந்த மீன் பிடி தொழிலாளர்கள் சாத்தனூர் அணை மீன் வளர்ச்சி கழக அலுவலகத்தை முற்றுகை செய்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 4,000 மூட்டை நிலக்கடலை ஏலம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:57 IST

இடைப்பாடி: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் சுமார் 4 ஆயிரம் மூட்டை நிலக்கடலை 38 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது. அதிக அளவு பருத்தி ஏலத்திற்கு வரும் கூட்டுறவு சங்கங்களில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கம் முன்னணியில் உள்ளது. அதேபோல் நிலக்கடலை சாகுபடியாகும் போது, வாரந்தோறும் வெள்ளி, சனி ஆகிய இரண்டு நாட்கள் ஏலம் நடைபெறும். இந்த நிலக் கடலை ஏலத்தில் கலந்துகொள்வதற்கு உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றி சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும் அதிக அளவில் கலந்து கொள்வர். அதனால், கொங்கணாபுரம் கூட்டுறவு சங்கத்தில் நடக்கும் ஏலத்தில் மற்ற இடங்களை விட விளை பொருளுக்கு கூடுதல் விலை கிடைக்கும்.
கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று சுமார் 4 ஆயிரம் மூட்டை நிலக்கடலை ஏலத்திற்கு வந்தது. 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை ரூபாய் 850 முதல் ரூபாய் 1,050 வரை ஏலம் போனது. நிலக்கடலை மூட்டைகள் மொத்தம் 38 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**வேளாண் கூட்டுறவு வங்கி சேவை மையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,03:31 IST

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் நான்கு இடங்களில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் பொது சேவை மையம் துவங்கப்படும்," என, மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் பேசினார்.கபிலர்மலை யூனியன் பெரிய சோளப்பாளையம் கிராமத்தில் பொது சேவை மையத் திறப்பு விழா நடந்தது. மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் சேவை மையத்தை திறந்து வைத்து பேசியதாவது:தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் சஹாஜ் நிறுவனம் இணைந்து வழங்கும் பொது சேவை மையம் மக்களுக்கு பல்வேறு வகையில் உதவிழயாக உள்ளது.

அந்த மையத்தின் மூலம் நிலவுடைமைப் பட்டா, அரசு விண்ணப்பம், ரயில்வே டிக்கெட் முன்பதிவு, அடிப்படை கம்ப்யூட்டர் பயிற்சி உள்ளிட்டவை அளிக்கப்படுகிறது.மாவட்டத்தில் பெரிய சோளபாளையம், உஞ்சனை, மேட்டுப்பாளையம், கே.கே. வலசு, முள்ளுக்குறிச்சி, ஈஸ்வரமூர்த்திபாளையம், என். ராமநாதபுரம் ஆகிய இடங்களில் பொது சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் வட்டூர், சின்னமணலி, எருமப்பட்டி, குருக்கபுரம் ஆகிய நான்கு இடங்களில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் பொது சேவை மையம் துவங்கப்பட உளளது. இதை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக, கொளக்காட்டுப்புதூரில் 28 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி, குமாரசாமிபாளையத்தில் 3 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட ரேஷன் கடையை மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் திறந்து வைத்தார்.கபிலர்மலை தொகுதி எம்.எல்.ஏ., நெடுஞ்செழியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சீனிவாசன், வெங்கரை டவுன் பஞ்சாயத்து தலைவர் அமுதா, துணைத் தலைவர் நல்லசிவம், முன்னாள் யூனியன் சேர்மன் மூர்த்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

**சனிக்கிழமைகளில் சக்கைப்போடு போடும் சாமந்தி பூ விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,01:52 IST

கோயம்பேடு : புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் கோவில் மற்றும் வீடுகளில் பூஜை வழிபாடுகள் விமரிசையாக நடைபெறுவதால், கோயம்பேடு மார்க்கெட்டில் சாமந்தி பூக்களின் விற்பனை களைகட்டியுள்ளது. இம்மாதத்தில் சனிக்கிழமை விஷேச நாள் என்பதால், இரண்டாவது சனிக்கிழமையான நேற்று சாமந்தி பூக்களின் விற்பனை களைகட்டியது. இதற்காக நாள்தோறும் மார்கெட்டிற்கு சராசரியாக 10 டன் பூக்கள் வரத்துள்ளன. பெருமாளுக்கு துளசி விஷேசம் என்பதால் துளசி மற்றும் சாமந்தி பூக்களுக்கு நல்ல கிராக்கியிருந்தது. நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ சாமந்தி 80 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

சாமந்தி பூவை பொறுத்தவரை, மார்க்கெட்டிற்கு தமிழ் மாதத்தில் ஆனி மாதம் துவங்கி சித்திரை மாதம் வரை வரத்து இருக்கும். ஒன்றரை மாத காலம் சீசன் முடிந்து மற்ற பகுதிகளில் இருந்து அதன் வரத்து எதிர்பார்க்கப்படும்.
தற்போது ஓசூர் பகுதியில் ஒன்றரை மாத கால சீசன் முடிந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து சாமந்தி வரத்துவங்கியுள்ளது. கோயம்பேடு பூ மார்க்கெட் சங்கச் செயலர் மூக்கையா கூறுகையில், "வியாபாரிகளுக்கு சனிக்கிழமை வியாபாரம் நம்பிக்கை அளித்துள்ளது. அடுத்தடுத்த

சனிக்கிழமைகளில் எதிர்பார்த்த அளவிற்கு சாமந்தி பூக்களின் விற்பனை இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

அடுத்து வரும் மகாளய அமாவாசையில் இருந்து பூக்களின் வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிடும்' என்றார். முடிவுக்கு வரும் முல்லை மற்றும் மல்லிகை கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக கோயம்பேடு மார்க்கெட்டில் மல்லிகை மற்றும் முல்லை பூக்களின் வரத்து அதிகரித்து விற்பனை இருந்தது. தற்போது அதன் உற்பத்தி குறைந்து, மார்க்கெட்டிற்கு வரத்து படிப்படியாக குறையத் துவங்கியுள்ளது. மழைக்காலம் துவங்கி, அடுத்தடுத்த மாதங்களில் அதன் சீசன் மறையும் என்பதால், ஜாதி மற்றும் சாமந்தி பூக்களே அதிகளவு விற்பனையில் இருக்கும்.

**மீன் வளர்ப்பு குட்டையாக மாறிய நெல் வயல்கள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,01:45 IST

ஈரோடு: நெல் சாகுபடியில் தொடர்ந்து நஷ்டமடைவதால், காலிங்கராயன் வாய்க்கால் பாசன நிலத்தை, மீன் குட்டையாக மாற்றியுள்ளார் ஒரு விவசாயி. காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் ஆண்டுதோறும் நேரடியாக 17 ஆயிரம் ஏக்கரும், வாய்க்காலை ஒட்டிய கிணற்றுப் பாசனத்தில் 3,000 ஏக்கர் வரையும் சாகுபடி பணி நடக்கிறது. நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிர்களை விவசாயிகள் அதிகம் சாகுபடி செய்கின்றனர். பி.பி.அக்ரஹாரம், வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதிகளில் சராசரியாக ஆண்டு தோறும் 1,500 ஏக்கருக்கு மேல் குண்டு ரக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடியில், நடவு, பராமரிப்பு, அறுவடை பணிக்கு விவசாய கூலித் தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. அதிகளவு நோய் தாக்குவதுடன், பருவமழை முறையாக பெய்யாதததால், நெல் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்படுகிறது. நெல் சாகுபடியில் உற்பத்தி செலவுக்கு கூட கிடைக்காமல், விவசாயிகள் ஆண்டு தோறும் நஷ்டமடைகின்றனர். மாதம் பத்தாயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும் மீன் குட்டை அமைத்து, மீன் வளர்க்கும் தொழிலுக்கு விவசாயி ஒருவர் மாறியுள்ளார். நெல் சாகுபடி செய்த வயலை, மீன் வளர்க்கும் குட்டையாக மாற்றியுள்ளார்.

திண்டுக்கல், ஆந்திரா மாநிலம் நெல்லூர் போன்ற பகுதிகளிலிருந்து மீன் குஞ்சுகளை வாங்கி வருகிறார். வாய்க்கால் தண்ணீரை பயன்படுத்தி, குட்டைகளை அமைத்துள்ளார். ஏக்கருக்கு 20 ஆயிரம் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. மீன் குஞ்சுகள் குட்டையில் விட்ட ஆறு முதல் ஏழு மாதத்தில், அவை ஒன்று முதல் ஒன்றரை கிலோ வரை வளர்கின்றன. பின்னர் விற்பனை செய்யப்படுகின்றன. திருச்சி உள்பட தமிழகத்தில் இருந்து வியாபாரிகள் மீன்களை வாங்கி செல்கின்றனர். அனைத்து செலவும் போக மாதம் பத்தாயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை

லாபம் கிடைக்கிறது. அதிக லாபம் கிடைப்பதால், பாரம்பரியமாக செய்துவந்த நெல் சாகுபடியை கைவிட்டுவிட்டு, அதிக லாபம் தரும் மீன் வளர்ப்பில் தீவிரமாக மாறி வருகின்றனர்.

வைராபாளையம் விவசாயி தங்கராஜ் கூறியதாவது: ஆண்டுதோறும் நெல் சாகுபடி செய்து வந்தேன். ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு பாதிப்பில் நஷ்டம் ஏற்படுகிறது. நடவு, அறுவடை, மருந்தடிக்க தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. பராமரிப்பு செலவு அதிகமாகிறது. சென்றாண்டு புகையான் நோயால், நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. பருவமழையும் பெய்வதில்லை. மீன் வளர்ப்பில் அதிக லாபம் கிடைப்பதாக கூறினர். அதன்படி, இரண்டு மாதங்களுக்கு முன் மூன்று ஏக்கரில் மீன் குட்டை அமைத்துள்ளேன். நெல்லூரிலிருந்து மீன் குஞ்சு வாங்கி வந்தேன். மூன்று இன்ச் அளவுள்ள "பங்காஸ்' வகை மீன்களை குட்டையில் விட்டுள்ளேன். முறையாக வளர்த்தால், ஆறு முதல் ஏழு மாதத்தில், ஒன்று முதல் ஒன்றரை கிலோ வரை மீன்கள் வளர்ந்து விடும். தவிடு, கிழங்கு சக்கை, சாப்பாடு கழிவு போன்றவவற்றை உணவாக வழங்குகிறோம். குட்டை பராமரிப்புக்கு ஒருவரும், உணவுக்கு தேவையான கழிவுகளை கொண்டு வர ஒருவரும் இருந்தால் போதும். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் குட்டைகளில் வளரும் மீனை பார்வையிட்டு, வாங்கி செல்கின்றனர். மீன் வளர்ப்பில் செலவு போக மாதம் பத்தாயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:35 IST

அம்மாபேட்டை: அம்மாபேட்டை வேளாண் விரிவாக்க அலுவலகத்தில், ஈரோடு உழவர் பயிற்சி மையம் சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். மைய அலுவலர் பிரசாத் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குனர் திருமூர்த்தி, மண் பரிசோதனை நிலை அலுவலர் வசந்தி, வட்டார கால்நடை உதவி மருத்துவர் கோவிந்தராஜன், விதைச்சான்று அலுவலர் மகாதேவன், வட்டார உதவி இயக்குனர் பழனிச்சாமி மற்றும் பலர் பேசினர்.

**சொட்டு நீர் பாசனம்: ரூ.1.35 கோடி கடன்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:32 IST

ஈரோடு: சொட்டு நீர் பாசனம் அமைக்க 244 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 1.35 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.பெருந்துறை தாலுகா

நிச்சாம்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர் கல்வித் திட்ட முகாம் நடந்தது. 49 பேருக்கு 8.23 லட்சம் ரூபாய் கடன் வழங்கி ஈரோடு இணைப்பதிவாளர் பாபு பேசுகையில், ""மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 244 விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 1.35 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது," என்றார்.மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் லோகநாதன், சரக துணைப்பதிவாளர் காந்திநாதன், பிரச்சார அலுவலர் ஆனந்தராஜ் ஆகியோர் பேசினர்.டாக்டர் அகர்வால் மருத்துவமனை குழுவினரால் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது. தனி அலுவலர் வசந்தி வரவேற்றார். செயலாளர் சித்தன் நன்றி கூறினார்.

**பட்டு வளர்ப்பு செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:48 IST

கிருஷ்ணகிரி: ஊத்தங்கரை அடுத்த தகரப்பட்டியில் பட்டு வளர்ப்பு மருந்தடிப்பு செயல்விளக்க முகாம் நடந்தது.
பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் கோலப்பா பிள்ளை தலைமை வகித்து மகளிர் காப்பீடு மற்றும் நலத்திட்ட உதவிகள் குறித்தும், பட்டு வளர்ப்பு மேற்கொள்வதின் பயன்கள் குறித்தும் விளக்கி பேசினார். உதவி ஆய்வாளர் கோவிந்தசாமி முன்னிலை வகித்தார். ஆத்மா திட்ட தலைவர் விவேகானந்தனர் பல்பரி தோட்ட பராமரிப்பு செய்வது குறித்து பேசினார்.

மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலாமணி பட்டு வளர்ப்பு மனையில் மருந்தடிப்பு செய்வது குறித்தும், இளம்புழு வளர்ப்பு மனையில் பட்டு விவசாயிகளுக்கு மருந்தடிப்பு செயல் விளகத்தையும் செய்து காண்பித்தார். பட்டு விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை சென்னகேசவன், சுப்பிரமணி, விஜயன், திருநாவலர் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்**

பதிவுசெய்த நாள் : செப்டம்பர் 27,2010,01:33 IST

மேலூர்:மேலூர் மற்றும் கொட்டாம்பட்டியை சேர்ந்த விவசாயிகளுக்கு ஆத்மா திட்டத்தின் கீழ், திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது. மேலூர் யூனியன் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், யூனியன் சேர்மன் அழகுபாண்டி தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் கணேசமூர்த்தி தொடங்கி வைத்தார். உதவி இயக்குனர் கணேசன், விற்பனை குழு

செயலர் பாஸ்கர் ராஜ் முன்னிலை வகித்தனர்.வேளாண் துறை, வணிக துறை, தோட்டக்கலை துறை, கால்நடை துறை, விதை சான்றழிப்பு துறை, பட்டு வளர்ச்சி துறை சார்பாக அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். விவசாய திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கப்பட்டது.

**சூரியகாந்தி சாகுபடியில்விதை கடினப்படுத்துதல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,03:10 IST

மதுரை:""சூரியகாந்திப் பயிரில் மகசூல் இழப்பைத் தவிர்க்க, விதையை கடினப்படுத்த வேண்டும்,'' என, மதுரை நீர் மேலாண்மை பயிற்சி நிலைய மேலாண் துணை இயக்குனர் காதிரி தெரிவித்துள்ளார்.குறுகிய காலப் பயிரான சூரியகாந்தியை ஆண்டு முழுதும் பயிரிடலாம். தண்ணீர் தேவை குறைவு. வறட்சியைத் தாங்கக்கூடியது. எல்லா வகை மண்ணுக்கும் ஏற்றது. சிறந்த எண்ணெய் வித்துப் பயிர். சூரியகாந்தி புண்ணாக்கில் புரதச்சத்து இருப்பதால் கால்நடை தீவனமாக பயன்படுகிறது. இதை ஊடுபயிராகவும், கலப்புப் பயிராகவும் பயிரிடலாம். இதில் விதையை அப்படியே பயன்படுத்தினால் மகசூல் இழப்பு ஏற்படும். ஒரு லிட்டர் குடிநீரில் 20 கிராம் துத்தநாக சல்பேட் கரைசலைச் சேர்த்து, அதில் ஒரு கிலோ விதைகளை 12 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். அதன் பிறகு விதைத்தால் முளைப்புத் திறன் அதிகரிப்பதோடு, மகசூல் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார்.

**வறட்சியால் பிளாட்டுகளாக மாறும் தென்னந்தோப்புகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,23:59 IST

பட்டிவீரன்பட்டி: அய்யம்பாளையத்தில் வறட்சியால் தென்னந் தோப்புகள் பிளாட்டுகளாக மாறி வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத் தில் தென்னை மரங்கள் அதிகமாக உள்ள இடம் அய்யம்பாளையம். இங்கு விளையும் தேங்காய் பெரியதாக, சுவையாக இருப்பதால் "மவுசு' அதிகம். மாவட்டத்தின் பிற இடங்கள் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு இங்கு வளர்க்கப்படும் தென்னங் கன்றுகளை விரும்பி வாங்கிச் செல்வர். தென் னை வளர்பிற்கு ஏற்ற மண்ணும்,நீர்வசதி இருந்ததால் அய்யம்பாளையம் தென்னை வளர்ப்பிற்கு பெயர் பெற்றது. கடந்த சில மாதங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. ஆனால் வத்தலக்குண்டு, பட்டிவீரன்பட்டி, அய்யம் பாளையம் பகுதிகளில் மழை இல்லை. இப்பகுதி விவசாயிகளின் நீர் ஆதாரமான மருதாநதி அணை பாதி அளவைக் கூட எட்டவில்லை. அய்யம்பாளையம் ஆற்றில் மணல் கொள்ளையடிக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் பாதா ளத்திற்கு சென்று விட்டது.

இதனால் தென்னை மரங்களை காப்பாற்ற முடியாமல் மரங்களை அழித்து "பிளாட்டுகள்' அமைத்து வருகின்றனர். இது குறித்து விவசாயி முருகன் கூறும்போது, "ஆழ்துளை கிணறு அமைத் தாலும் நீர் கிடைக்கவில்லை. மருதாநதியின் வடக்கு வாய்க்கால் தூர் வாறாமல் இருப்பதால் தண்ணீர் வருவதில்லை. தண்ணீர் இல்லாமல் மரங்கள் வாடுகின்றன. இதனால் மரங்களை வெட்டிவிட்டு "பிளாட்டுகள்' அமைக்கிறோம்' என்றார்.

**ஒட்டன்சத்திரத்தில் பயறு வகை பயிர்களை பயிரிட யோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,22:59 IST

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் பெய்த மழையை பயன்படுத்தி மானாவாரி, இறவை,தோட்டக்கால் நிலங்களில் பயறு வகைகளை பயிரிட விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை கூறி உள்ளது.

ஒட்டன்சத்திரத்தில் பெய்த மழை காரணமாக போதிய ஈரம் செறிந்துள்ளதால் மானாவாரி, இறவை மற்றும் தோட்டக்கால் நிலங்களில் உளுந்து, தட்டைப்பயறு போன்ற பயறு வகைகளை விதைக்குமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. விதைக்கும் போது ரைசோபியம் நுண்ணுயிர் உரத்துடன் விதைகளை கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதற்கான உளுந்து, தட்டைப்பயறு விதைகள் மற்றும் ரைசோபியம், பாஸ்போ பேக்டீரியம் நுண்ணுயிர் உரங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சான்று செய்த டி.எம்.வி1, வம்பன் 4 போன்ற உளுந்து விதைகளும்,கோ.சி.பி.7, தட்டைப்பயறு விதைகளும் அதற்கான விதை செய்ய ஏதுவான நுண்ணுயிர் உரங்களும் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. உழவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இடுபொருட்களை வாங்கிச் கொள்ளுமாறு ஒட்டன்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் முத்துராமலிங்கம் கேட்டுக் கொண் டுள்ளார்.

**மீன் வளர்க்க நிதி உதவி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,01:14 IST

தேனி:தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தில் 2010-11 க்கு தனியார் உபவடிநிலப்பகுதியில் வண்ணமீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க 1.50 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. ஆர்வம் உள்ள மீனவர்கள் வைகை அணை மீன்வள உதவி இயக்குனரை

அணுகலாம் என வைகை அணை மீன்வள உதவி இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெற்றிலை உபயோகிப்போர் எண்ணிக்கை சரிவு விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,00:40 IST

கீழக்கரை: வெற்றிலை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்ததால்,விளைந்த வெற்றிலை கொடிப் பயிர்களை விற்க முடியாமல் விவசாயிகள் திணறுகின்றனர். மாவட்டத்தில் பெரியபட்டனம், முத்துபேட்டை,புதுமடம் கிராமங்களில் வெற்றிலை பயிரிடுதல் முக்கிய தொழிலாக விளங்கி வந்தது.இப்பகுதியில் விளையும் வெற்றிலைகள் ருசி மிகுந்திருப்பதால் ,தமிழகம் மட்டுமில்லாமல், வெளிமாநிலங்களிலும் நல்லகிராக்கி உள்ளது.இதனால், மொத்த வியாபாரிகள் ஆர்வத்துடன் வெற்றிலைகளை வாங்கி செல்வர். வெற்றிலை விவசாயிகளுக்கு அரசு எவ்வித சலுகையும் அளிக்கப்படாத நிலையிலும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இந்த தொழிலில் ஏராளமானோர் ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தனர். சில ஆண்டுகளாக இயற்கை இடர்பாடுகளின் காரணமாக வெற்றிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தும், அரசு தரப்பில் நிவாரணம் கிடைக்கவில்லை. இதனால் ஏராளமானோர் மாற்று தொழிலுக்கு சென்றனர்.இதைதொடர்ந்து, வெற்றிலை கொடிக்கால்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.நடப்பாண்டில் ஏற்பட்ட தேக்கத்தை தொடர்ந்து விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. வெளிமாவட்ட வியாபாரிகள் வராததால் வெற்றிலைகளை பறிக்காமல் காய்ந்து கீழே விழுகின்றன.

**மழை இல்லாததால் பயிர் உற்பத்தி குறைவு: நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,00:25 IST

விருதுநகர்: மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் பயிர் உற்பத்தி குறைந்துள்ளது. நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் சாகுபடி செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை போதுமான அளவு பெய்யவில்லை. ஆண்டு சராசரியான 829.6 மி.மீ.,யில் நடப்பாண்டில் இதுவரை 295 மி.மீ., மட்டுமே மழை பெய்துள்ளது. வட கிழக்கு பருவமழையும் போதியளவில் பெய்யாத நிலையில் பயிர் உற்பத்தி பரப்பு குறைந்து வருகிறது. 2010-11 ஆண்டிற்கு நெல் உற்பத்தி 34 ஆயிரம் எக்டேர் இலக்கில் செப்., வரை 657 எக்டேர் வரை மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. சிறுதானியங்களில் 35,900 எக்டேர் இலக்கில் சோளம் 444, கம்பு 38, ராகி 35, மக்காசோளம் 92 எக்டேர், பயிறு வகையில் துவரை 23, உளுந்து 261, பாசிப்பயிறு 252, தட்டை பயிறு 4 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன. பருத்தி 8000 எக்டேர்

இலக்கில் 752 எக்டேர், கரும்பு 2,979 எக்டேரிலும் பயிர் செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 7,200 எக்டேர் இலக்கில் கடலை 1,114, எள் 901, சூரியகாந்தி 14, ஆமணக்கு 30 எக்டேரிலும் மொத்தமாக 2,059 எக்டேர் பயிர் செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 550 எக்டேரில் இதுவரை நெல், கரும்பு, பருத்தி, சிறுதானியங்கள், பயிறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய அனைத்தும் சேர்த்து 7,200 எக்டேரில் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. விவசாய அதிகாரிகள் கூறியதாவது: 2011 மார்ச் வரை காலம் உள்ளது. வடகிழக்கு பருவமழை தாமதமாக துவங்கியிருப்பதால் இலக்கை எட்டுவதற்கு வாய்ப்புள்ளது. கடந்தாண்டு செப்டம்பர் வரை 6,345 எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது, என்றனர்.

**தரமில்லாத உரம், பூச்சி மருந்து விற்ற 10 பேர் மீது நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,23:47 IST

விருதுநகர் : மாவட்டத்தில் தரமில்லாத உரங்கள், பூச்சி மருந்துகள் விற்பனை செய்த 10 கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 2010-11ம் ஆண்டுக்கு 360 உர மாதிரிகள் ஆய்வு செய்ய வேண்டும். செப்.,24 வரை 192 மாதிரிகள், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஆய்வு மையத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் ஒன்பது மாதிரிகள் தரம் குறைந்த உரங்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை விற்பனைக்கு வைத்திருந்த 9 கடை உரிமையாள்களுக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதில் நான்கு கடைகள் மீது கோர்ட் மூலமாகவும், ஐந்து கடைகள் மீது துறை ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளன.

பூச்சிக்கொல்லி மருந்துகள் 585 மாதிரிகள் ஆய்வு செய்ய வேண்டும். 266 மாதிரிகள் எடுத்து திருநெல்வேலி ஆய்வு மையத்திற்கு அனுப்பபட்டன. இதில் ஒரு மாதிரி தரக்குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர் மீது கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**பயிர்களுக்கு இன்சூரன்ஸ் வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,02:52 IST

செய்துங்கநல்லூர்: கருங்குளம் யூனியனில் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுவதாக வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார். கருங்குளம் வேளாண் அலுவலர் அஜ்மல்கான்

தெரிவித்துள்ளதாவது, தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குனர் ஜோசப் கருணாநிதியின் உத்திரவின் பேரில் கருங்குளம் யூனியனில் பயிரிடப்படும் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. பயிரிட்டு ஒரு மாத காலத்திற்குள் அந்த பயிருக்கான பிரிமியத்தினை செலுத்த வேண்டும். பிரிமியத்தை வேளாண்மைத்துறை அதிகாரிகள் மூலம் அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் அல்லது கமர்சியல் பாங்க் மூலம் செலுத்தலாம். மேலும் உளுந்து பயிருக்கு ஏக்கருக்கு இருபத்து நான்கு ரூபாயும், பாசிப்பயிறுக்கு ஏக்கருக்கு ரூ.33ம், மக்காசோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.55ம், சோளம், கம்பு, நிலக்கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு தலா ஏக்கருக்கு ரூ.29, ரூ.63, ரூ.180 மற்றும் ரூ.58ம், சூரியகாந்திக்கு ஏக்கருக்கு ரூ.100ம், பருத்தி பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் ஆயிரத்து நானூற்று அறுபதும், மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு ரூபாய் ஆயிரத்து இருநூற்று தொன்னூறும், நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.160ம், பிரிமியமாக செலுத்த வேண்டும் இவ்வாறு பிரிமியம் செலுத்தப்பட்ட பயிர்கள் இயற்கை சீற்றம், வெள்ளம், வறட்சி போன்ற காரணத்தால் பாதிக்கப்பட்டால் அதன் மார்க்கெட் மதிப்பு இழப்பீடாக வழங்கப்படும். அதே நேரம் விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ்க்கான பாரங்களை நிரப்பி அத்துடன் பட்டா மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இணைக்க வேண்டும். மேலும் ஏதேனும் சந்தேகம் இருந்தால் செய்துங்கநல்லூரில் கருங்குளம் யூனியனில் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள விவசாய அலுவலகத்தை அணுகலாம் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**பிசான பருவ சாகுபடிக்கு டிஏபிக்கு பதில் மாற்று உரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:34 IST

ஆறுமுகநேரி : திருச்செந்தூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பிசான பருவ சாகுபடியின் போது டி.ஏ.பி.,க்கு பதில் மாற்று உரங்களை பயன்படுத்தி பயன்பெற திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார். இதுகுறித்து திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் உத்தண்டராமன் தெரிவித்துள்ளதாவது,
திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசான பருவ நெல்சாகுபடி வரும் அக்டோபர் மாதம் துவங்க உள்ளது. இதற்கு தேவையான விதை நெல் திருச்செந்தூர், சோனகன்விளை, ஆறுமுகநேரி ஆகிய வேளாண் விரிவாக்க மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் நெற்பயிருக்கு அடி உரமாக டிஏபி., உரத்தினை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் டிஏபி உரம் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என முன்கூட்டியே வாங்கி இருப்பு வைத்துவிடுகின்றனர். இதனால் டி.ஏ.பி உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. டி.ஏ.பி. உரத்தில் 18 சதவீதம் தழைச்சத்து, 46 சதவீதம் மணிச்சத்து உள்ளது. இந்த

அளவு சத்துக்கள் குறிப்பிட்ட ஒருசில நிறுவன உரத்தில் மட்டும்தான் உள்ளது என கூறுவது தவறு. அனைத்து நிறுவன டி.ஏ.பி. உரங்களிலும் இந்த அளவு சத்துக்கள் உள்ளது. மேலும் டி.ஏ.பி. கிடைக்காத பட்சத்தில் இதர கூட்டு உரங்களான அம்மோனியம் பாஸ்பேட், சல்பேட் உரங்களையும் பயன்படுத்தலாம். பாரம்பாஸ் என்னும் அம்மோனியம் பாஸ்பேட், சல்பேட் உரத்தில் 16 சதவீதம் தழைச்சத்து மற்றும் 20 சதவீதம் மணிச்சத்து உள்ளது. பாக்டம்பாஸ் எனப்படும் உரத்தில் 20 சதவீதம் தழைச்சத்து, 20 சதவீதம் மணிச்சத்தும் உள்ளது. எனவே விவசாயிகள் தங்கள் பயிருக்கு தேவையான சத்துக்களின் அளவிற்கு ஏற்ப டி.ஏ.பிக்கு மாற்றாக கிடைக்கும் உரங்களை வாங்கி வயலில் இட்டு பயன்பெறலாம். இவ்வாறு வேளாண் உதவிஇயக்குநர் உத்தண்டராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**விவசாயிகளின் விபரங்கள் கம்ப்யூட்டரில் பதிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 26,2010,02:23 IST

செய்துங்கநல்லூர் : கருங்குளம் யூனியனில் விவசாயிகளின் விபரங்கள் கம்ப்யூட்டரில் பதிவு செய்ய ஒத்துழைப்பு தர வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார். கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் மற்றும் வேளாண்மை அலுவலர் அஜ்மல்கான் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, விவசாயிகளுக்காக அரசு ஏற்படுத்தும் திட்டங்கள் அவர்களை சென்றடையவும், விவசாயிகளின் தரம் குறித்து புதிய திட்டங்களை தயாரிக்கவும் விவசாயிகளின் முழு விபரங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்து அரசு ஏற்படுத்தியுள்ள அக்ரிநெட் இணைய தளத்தில் இணைக்க அரசு உத்திரவிட்டுள்ளது. கருங்குளம் யூனியனில் 9 ஆயிரத்து 166 விவசாயிகள் உள்ளனர். அதில் சுமார் 2 ஆயிரம் விவசாயிகளின் விபரங்கள் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள விவசாயிகளின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே இதுவரை விவசாயிகள் தங்களது முழு விபரத்தினை எங்கள் அலுவலகத்தில் அல்லது களப்பணியினர்களிடம் தெரிவிக்காமல் இருந்தால் உடனே தெரிவிக்க கேட்டுக் கொள்கிறோம் இவ்வாறு கூறியுள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI

## 2013–ம் ஆண்டு பருத்தி விளைச்சலை 450 லட்சம் பேலாக உயர்த்த இலக்கு தென் இந்திய பருத்தி கழக பொதுக்குழுவில் தீர்மானம்

கோவை, செப்.27–

பருத்தி விளைச்சலை 2013–ம் ஆண்டு 450 லட்சம் பேலாக உயர்த்த இலக்கு நிர்ணயித்து கோவையில் நடைபெற்ற தென் இந்திய பருத்தி கழக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுக்குழு கூட்டம்

கோவை ஜென்னி கிளப்பில் தென் இந்திய பருத்தி கழக பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டதிற்கு தென் இந்திய பருத்தி கழக தலைவர் சி. சவுந்திரராஜன் தலைமை தாங்கினார். செயலாளர் கே.என்.விஸ்வநாதன், இணை செயலாளர் ஏ.ரமணி மற்றும் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பருத்திகழக தலைவர் சவுந்திரராஜன் பேசியதாவது:–

தற்போது இந்திய பொருளாதாரம் நல்ல நிலைமையில் உள்ளது. நடப்பு பருவத்தில் விவசாய பயிர் சாகுபடி பரப்பளவு அதிகரித்து இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் உணவு தானிய உற்பத்தி மற்றும் விவசாய விளை பொருட்கள் உற்பத்தி அதிகரித்து உள்ளது. இதனால் தொழிற்சாலைகளில் உற்பத்தியும், மில்களில் நூல் தயாரிக்கும் உயர்ந்து இருப்பது உண்மை. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக உயர்ந்துள்ள நிலையில் உணவு தானிய பண வீக்கம் ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருவது கவலை அளிக்கிறது. எனவே பண வீக்கத்தை கட்டுப்படுத்த அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விலை உயர்வு

2009–10 ம் ஆண்டு பருத்தி விளைச்சல் 295 லட்சம் பேலாக இருந்தது. இது 2010–11 ம் ஆண்டு 325 லட்சம் பேலாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2009–ம் ஆண்டு தொடக்கத்தில் ஒரு பேல் விலை ரூ.23,500 ஆக இருந்தது. ஆனால் தற்போது ரூ.38,000 ஆக உயர்ந்து விட்டது. இந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு போய் சேரவில்லை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களும், இந்தியாவில் உள்ள

வெளிநாட்டு கம்பெனிகளும் மட்டுமே பயன்அடைகிறார்கள்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் போதிய பஞ்சுகள் இல்லாமல் இந்திய நூல் மில்களில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே பருத்தி உற்பத்தியை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஒரு ஆண்டில் மட்டும் பருத்தி விலை 75 சத வீதம் உயர்ந்து விட்டது. உலகில் பருத்தி உற்பத்தியில் இந்தியா 2–வது பெரியநாடு என்பதால் இதற்கு அரசு உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தீர்மானங்கள்

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

இந்தியாவில் பருத்தி உற்பத்தியை 2013 ம் ஆண்டு 450 லட்சம் பேலாக உயர்த்த நடவடிக்கை எடுப்பது, இந்திய பருத்தி கழகம் பருத்தி விற்பனை நிலையங்களை கோவை மற்றும் ராஜபாளையத்தில் தொடங்க முடிவு எடுத்து இருப்பது வரவேற்க தக்கது. இந்த திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்த வேண்டும் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நடப்பு கரீப் பருவத்தில் நாட்டின் கரும்பு உற்பத்தி 17 சதவீதம் அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு கரீப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்), சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும், நாட்டின் கரும்பு உற்பத்தி 17 சதவீதம் அதிகரிக்கும் என மத்திய திட்டக்குழு மதிப்பீடு செய்துள்ளது.

இரண்டாவது இடம்

உலக அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில், தென் அமெரிக்க நாடான பிரேசில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே உலகில் முன்னிலையில் உள்ளது. உலகம் முழுவதுமாக 110–க்கும் மேற்பட்ட நாடுகளில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. உலகின் மொத்த கரும்பு உற்பத்தியில் பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது.

நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.85 கோடி டன் முதல் 1.90 கோடி டன் வரை இருக்கும் என சர்வதேச சர்க்கரை அமைப்பு ஏற்கனவே தெரிவித்துள்ளது. எதிர்வரும் புதிய பருவத்தில் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி 2.60 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தியா ஐந்து லட்சம் டன் மூலச்சர்க்கரை ஏற்றுமதி செய்ய இயலும் என அவர் மேலும் கூறினார்.

எதிர்வரும் பருவம்

எதிர்வரும் 2010–11 பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு பருவத்தைக் காட்டிலும் 38 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவமழை நன்றாக இருப்பதும், கரும்பு பயிரிடும் பரப்பளவு உயர்ந்துள்ளதுமே இதற்கு காரணமாகும். புதிய பருவத்தில் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என்பதால், சர்க்கரை விலை மேலும் சரிவடைய வாய்ப்புள்ளது. அப்பருவத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சர்க்கரை விலை குறைந்து, கிலோ ஒன்றுக்கு ரூ.15 என்ற அளவை எட்டும் என சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது நுகர்வோர்களுக்கு சாதகமான அம்சம் என்றாலும், சர்க்கரை நிறுவனங்களின் வருவாய் பெரிதும் சரிவடையும் என்பதை மறுப்பதற்கில்லை.

சர்க்கரை பயன்பாடு

உள்நாட்டில் தற்போது சர்க்கரை பயன்பாடு ஆண்டுக்கு 2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது. தேவையை விஞ்சி உற்பத்தி அதிகரிக்கும்போது, சர்க்கரை ஏற்றுமதி உத்வேகம் பெறும். சர்க்கரை இறக்குமதியும் குறைந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது. பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளின் உற்பத்தி நிலவரங்கள் சர்வதேச சந்தையில் சர்க்கரை விலையில் ஏற்ற, தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன.

*அக்டோபர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில், எத்தனால் உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க சர்க்கரை நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. சர்க்கரை அளிப்பு தாராளமாக உள்ள நிலையில் சர்க்கரை உற்பத்தி வாயிலான லாப வரம்பு சரிவடையும் என இந்த நிறுவனங்கள் கருதுகின்றன. இதனை ஈடு செய்யும் வகையில், உப பொருளான எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க தயாராகி வருவதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.*

## விவசாய கருத்துக்காட்சி

*திருவள்ளூர், செப்.27–*

*இந்திய அரசு வேளாண்மைத்துறை நிதி உதவியுடன் மண்டல அளவிலான விவசாய கருத்துக்காட்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலமாக வருகிற 30–ந் தேதி முதல் 3–10–2010 வரை 4 நாட்களுக்கு கோயமுத்தூர் அவினாசி சாலையில் உள்ள கொடிசியா வளாகத்தில் நடத்தப்பட உள்ளது. இதில் கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் யூனியன் பிரதேசங்களான புதுச்சேரி, லட்சத்தீவுகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளிலிருந்தும் கலந்து கொள்கின்றனர். இதில் தென் மாநில அளவிலான ஆராய்ச்சி நிலையங்கள், அரசுத்துறை நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களின் தொழில் நுட்பங்கள், திட்டங்கள் மற்றும் உற்பத்தி பொருட்களை காட்சிக்கு வைக்க உள்ளனர். இது தவிர கருத்தரங்கமும் நடைபெற உள்ளது.*

*எனவே திருவள்ளூர் மற்றும் காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகள் இந்த கருத்து காட்சியில் பங்கு கொண்டு பயனடைய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி பேராசிரியர் மற்றும் தலைவர், நெல் ஆராய்ச்சி நிலையம், திருவூர் , திருவள்ளூர் மாவட்டம் – 602025, இத்தகவலை நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர் ராமசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*